In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 411/2022 |
| PW: | 7 |
| காவல் நிலையம்: | கடம்பூர் |
| தேதி: | 24-11-2025 நாள்: திங்கள் |
| பெயர்: | பிரான்சிஸ் சேவியர் |
| த/பெ: | அந்தோணி சாமி |
| கிராமம்: | காமநாயக்கன் பட்டி |
| தாலூகா: | கயத்தார் |
| வேலை: | முதல் நிலைக்காவலர் |
| வயது: | 34 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.11.2025**

(Accused present)

**முதல்விசாரணை**

1) நான் தற்போது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடம்பூர் காவல்நிலையத்தில் 2 ம் நிலைக்காவலராக பணிபுரிந்த போது ஆய்வாளர் உத்தரவின் பேரில் 01.04.2022 ம் தேதி 16.30 மணிக்கு கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் இருந்த கிடைக்கப்பெற்ற இசக்கியம்மாள் க/பெ, காளிமுத்து மலைப்பட்டி என்பவரது இண்டிமேஷனை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையம் வந்து 18.30 மணிக்கு நிலைய குற்ற எண். 49/2022 , U/s.294(b),324,323,506(i) IPC and 4 of TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்தேன்.( **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2) உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இன்டிமேஷனில் 30.03.2022 ம் தேதி இரவு 11.30 மணிக்கு இசக்கியம்மாள் மற்றும் அவரது மகள் ராதாவும் அவரது வீட்டின் முற்றத்தில் இருக்கும்போது, அந்த ஊரை சேர்ந்த சுதந்தரம் மகன் சுரேஷ் என்பவர் என்

முற்றத்தில் ஏன் அடிக்கடி தண்ணீர் ஊற்றுகிறாய் என்று இசக்கியம்மாளின் வலது கையை பிடித்து இழுத்து மோதிர விரலை பிடித்து கடித்து கீழே தள்ளிவிட்டதால் பின் தலையில் ஊமைக்காயமும் இருப்பதாக கூறினார். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இண்டிமேஷன் எப்போது கிடைக்கப்பெற்றது என்றால் ஆய்வாளர் என்னை 01.00 மணிக்கு மேல் அனுப்பி வைத்தார். எப்போது என்று எனக்கு நியாபகம் இல்லை. 16.30 மணிக்கு நான் மருத்துவமனைக்கு சென்றேன். புகார்தாரரை நான் பார்க்கும் போது சுமார் 05.00 மணி இருக்குமா என்றால் சுமார் மாலை 04.00 மணி இருக்கும்.

2) புகார்தாரர் எழுத்து பூர்வமாக புகார் கொடுத்தாரா என்றால் வாய் மொழியாக கொடுத்தார். நான் தான் எழுதினேன் வாக்குமூலம் பெறுவதற்கு 1 மணி நேரம் ஆனதா என்றால் அரை மணி நேரம் ஆனது. அதன் பிறகு காவல்நிலையத்திற்கு 18.00 மணிக்கு சென்றேன்.

3) புகார் வாக்குமூலத்தில் சம்பவம் 30.03.2022 ம் தேதி இரவு 11.30 மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் எனக்கு பகல் பணியா இரவு பணியா என்று சரியாக நியாபகம் இல்லை. நான் காவல்நிலையத்திற்கு வந்த பிறகு அந்த தினத்தில் என்ன என்ன சம்பவம் நடைபெற்றது குறித்து கேள்விப்பட்டேனா என்றால் கேள்விபடவில்லை.

4) 30.03.2022 ம் தேதி இரவு 11.30 மணியளவில் சம்பவம் நடைபெற்ற பிறகு கடம்பூர் காவல்நிலையத்தினர் அங்கு சென்றாரா என்றால் தெரியாது.காயம்பட்ட நபரான அ.சா.1 மற்றும் அவரது மகள் 30.03.2022 ம்

தேதி இரவு 11.30 மணிக்கு எழுத்து பூர்வமாக புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5) 01.04.2022 ம் தேதி கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்ந்ததாகவும் அங்கு சென்று புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் துறையினர் 30.03.2022 ம் தேதி சம்பவ இடத்தை பார்த்து விட்டு எழுத்து பூர்வமாக புகார் மனு பெற்றுவிட்டு எதிரியை பழிவாங்க வேண்டி அவர்கள் 31.03.2022 ம் தேதி கொடுத்த புகாரை மறைத்து 01.04.2022 ம் தேதி புகார் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், புகார் பெற்றதாக சொல்வதும். பின்னர் காவல்நிலையம் சென்று வழக்கு பதிவு செய்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் புகாரில் குறிப்பிட்ட சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய உயர் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.